**இலங்கையின் எதிர்கால தேர்தல் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கான 16 பரிந்துரைகளுடன் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கின்றது.**

***உடனடியாக வெளியிடுவதற்கு***

**கொழும்பு, 17 ஜனவரி 2025 -** இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு (EU EOM), செப்டம்பர் 21 ஆம் திகதி இடம்பெற்ற 2024 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அதன் இறுதி அறிக்கையை இன்று வெளியிட்டது. இவ்வறிக்கை இரண்டு மாத கால நாடு தழுவிய ரீதியான கண்காணிப்பை அடிப்படையாகக் கொண்ட, முழு தேர்தல் செயன்முறையின் விரிவான பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டை முன்வைக்கின்றது. ஜனநாயகத் தேர்தல்களுக்கான இலங்கையின் சர்வதேச உறுதிமொழிகளுக்கு இணங்க, எதிர்காலத் தேர்தல் செயன்முறைகளை வலுப்படுத்துவதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட 16 பரிந்துரைகளை இந்த அறிக்கையின் ஒரு பகுதியாக இந்தக் குழு முன்வைக்கின்றது.

தலைமை கண்காணிப்பாளரான ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் நாசோ சான்சஸ் அமோர் இங்கு குறிப்பிடுகையில், "2024 ஜனாதிபதித் தேர்தல், இலங்கையின் ஜனநாயகப் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க திருப்புமுனையாக இருந்ததுடன், முன்னெப்போதும் இல்லாத குழப்பமான காலத்திற்குப் பிறகு அரசியல் இயல்புநிலையை புதுப்பித்தது. ஜனநாயக செயன்முறை மீதான தமது அர்ப்பணிப்பை பிரஜைகள் வெளிக்காட்டிய அதேவேளை, இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு (ECSL) அனைத்து முக்கிய தேர்தல் கட்டங்களிலும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்து, சுயாதீனமாகவும் உறுதியுடனும் பணியாற்றியது. அமைதியான தேர்தல் தினமும், வேட்பாளர்கள் முடிவுகளை விரைவாக ஏற்றுக்கொண்டதும், இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் பலத்தை கோடிட்டுக் காட்டியது.", எனத் தெரிவித்தார்.

தேர்தல் பிரச்சார செலவுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட குறிப்பிடத்தக்க மறுசீரமைப்புகள் மற்றும் வாக்காளர் பட்டியலில் அதிகளவான இளைஞர்களை சேர்த்துக்கொள்ளுதல் உள்ளிட்ட பல நேர்மறையான முன்னேற்றங்களை கண்காணிப்புக் குழு குறிப்பிட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, தேர்தல் சட்டக் கட்டமைப்பு நன்கு விருத்தியடைந்துள்ளதாகவும், தேர்தல் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புடனான ஈடுபாடு தேர்தலுக்கு நேர்மறையான பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் கண்காணிப்புக் குழு தீர்மானித்துள்ளது. தேர்தல் பிரச்சாரம் முழுவதும் அடிப்படை சுதந்திரங்கள் மதிக்கப்பட்டதுடன், வாக்காளர்களுக்குத் தெரிவு செய்வதற்கான உண்மையான அரசியல் மாற்றுத் தெரிவுகள் இருந்தன.

தலைமை கண்காணிப்பாளர் நாசோ சான்சஸ் அமோர் மேலும் குறிப்பிடுகையில், "இலங்கையின் ஜனநாயகத்தின் மீள்தன்மையை ஜனாதிபதித் தேர்தல் சான்றுப்படுத்தியுள்ளது. தற்பொழுது, பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்தவுடன், ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் வெளிப்படைத்தன்மை, அனைவரையும் உள்ளடக்கிய தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மேலும் மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்துவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஐரோப்பிய ஒன்றியம் தற்போதுள்ள ஒத்துழைப்புக்கு இணங்க இந்த பாதையில் இலங்கைக்கு ஆதரவளிக்க தயாராக உள்ளது

அரசியலில் பெண்களின் பங்கேற்பை அர்த்தமுள்ள வகையில் மேம்படுத்தவும், அரச வளங்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளை வலுப்படுத்தவும் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் (EU EOM) இறுதி அறிக்கை பரிந்துரைக்கின்றது. பிரச்சார செலவுகள் தொடர்பான முற்போக்கான

மறுசீரமைப்புகளை மேலும் நேர்த்தியாகச் சரிசெய்வதன் மூலம் பயனடைய முடியும் என கண்காணிப்புக் குழு குறிப்பிடுகின்றது. நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கட்டுப்பாடான சட்டங்களை இரத்துச் செய்வதன் மூலம் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான அணுகலை மேம்படுத்துவதன் அவசியத்தை மேலும் வலியுறுத்தவும் இந்த இறுதி அறிக்கை அழைப்பு விடுக்கின்றது. "வெளிப்படைத்தன்மை, உள்ளடக்கிய தன்மை மற்றும் சுதந்திரமான வெளிப்பாடு மூலம் ஜனநாயகம் செழிக்கின்றது" எனக் குறிப்பிட்டு தலைமை கண்காணிப்பாளர் தனது உரையை நிறைவு செய்தார்.

இலங்கை தேர்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழு பணியமர்த்தப்பட்டதுடன், 2024 ஆகஸ்ட் 14 முதல் ஒக்டோபர் 10 வரை நாட்டில் இருந்தது. இது ஒன்பது மாகாணங்களிலும் 70 இற்கும் மேற்பட்ட சர்வதேச கண்காணிப்பாளர்களைப் பணியமர்த்தியது.

மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் ஊடக அலுவலகத்தை பின்வரும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும். அல்லது கீழே உள்ள QR குறியீட்டைப் பரிசீலிக்கவும்.

**ஊடக அதிகாரி,** marek.mracka@eueomsrilanka2024.eu
**உதவி ஊடக அதிகாரி,** rahul.vithanage@eueomsrilanka2024.eu